விலை, ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆனி 30 றம்ழான் 22 இதழ் 151
யாழ்ப்பாணம் புதன்கிழமை 14 7 82

பௌதிகவியல் வகுப்புகள்
83 and 84 A/L வகுப்புகள் நடைபெறுகின்றன.
ஆசிரியர்கள்:
திரு. தவபாலச்சந்திரன்
திரு. ஸ்ரீதரன்
"திருச் செல்வ ஜோதி"
பொற்பதி றோட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
[3829]

## 'யோகேஸ்' வழக்கு வாபஸ்

யாழ்ப்பாணம்

1981 மே 31ல் நிகழ்ந்த வன் செயலின்போது தமது வீடும் உடைமைகளும் எரிக்கப்பட்டது தொடர்பாக சட்டமா அதிபருக்கு எதிராக யாழ். எம் பி திரு. வெ. யோகேஸ்வரனும் அவரது பாரியார் திருமதி சரோஜினி யோகேஸ்வரனும் யாழ். மாவட்ட நீதி மன்றில் கடந்த வருடம் ஆகஸ்ட் 31ல் தாக்கல் செய்திருந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளது.

லயனல் குழு சிபார்சுமீது நஷ்டஈடுபெறுவதனுல் முதலில் வழக்கு வாபஸ்பெற

[8-ம் பக்கம் பார்க்க]

★ சென்னையில் கைதான தீவிரவாத தமிழ் இளைஞர்கள்

# குருநாதன் நிபந்தனையுடன் பிணை விடுதலை!

## ஐந்து இளைஞர்களுக்கும் தொடர்ந்து றிமாண்ட்

சென்னை, ஜுலை 13

சென்னையில் கைதான 6 இலங்கை தீவிரவாத தமிழ் இளைஞர்களில் "சின்னஜோதி" என்றழைக்கப்படும் குருநாதன், நிபந்தனையின் பேரில் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

சென்னை நீதிமன்றத்தில் பிணைமனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குருநாதன் பொலிஸாரினுல் கைதுசெய்யப்படும் போது; வெடிமருந்தும் ஆயுதங்களும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டிருந்தன.

சேலத்தை விட்டு வெளியில் செல்லக்கூடாதென்றும், ஒவ்வொரு கிழமையும் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகவேண்டுமென்றும் நீதிபதி அவரை பிணையில் விடுதலைசெய்கையில் நிபந்தனைவிதித்தார். மற்றும் 5 இளைஞர்களும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

## யாழ். ஆஸ்பத்திரியில் இன்று மரணவிசாரணை

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி பொலிஸ் துப்பாக்கிச்சூட்டு மரணவிசாரணை இன்று யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெறும்.

நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் இம்மரணவிசாரணை நடைபெற்றபோது யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் திரு. நவரத்தினராஜா விடுத்த கோரிக்கையை அடுத்தே நீதவான் மேல்விசாரணை இன்று யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெறும் என்று தெரிவித்தார்.

நெல்லியடி துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் இன்ஸ்பெக்டர் திருச்சிற்றம்பலமும் கான்ஸ்டபிள் சிவராசாவும் பருத்தித்துறை நீதிமன்றம் வந்து சாட்சியமளிப்பது அவர்களது உடல்நிலையைப்பாதிக்கும்; எனவே இம்மன்று அவர்களது சாட்சியங்களை யாழ். ஆஸ்பத்திரியில் பெறவேண்டும் என்று திரு. நவரத்தினராஜா முதல் நாள்விசாரணையின்போது விடுத்தகோரிக்கையின் பேரிலேயே இன்று யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து காயம் அடைந்தவர்களின் வாக்குமூலம் பதிவுசெய்யப்படும் என்று நீதவான் தெரிவித்தார். [புலோலி இ]

★ நெல்லியடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்:

## "அருந்தவராஜா உடலில் கத்திக்குத்து காயங்கள் காணப்பட்டன!"

### சட்டவைத்திய அதிகாரி சாட்சியம்

(புலோலி)

'நெல்லியடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான பொலிஸ் கான்ஸ்டபிள் ஆரியரத்தின (இல. 12993) வின் உடலில் 9 வெளிக்காயங்களும் 4 உட்காயங்களும் கான்ஸ்டபிள் மல்லவராச்சி(இல.13595) யின் உடலில் 8 வெளிக்காயங்களும் 5 உட்காயங்களும் கான்ஸ்டபிள் குணபால (இல. 4354 வின் உடலில் 15 வெளிக்காயங்களும் 3 உட்காயங்களும் கான்ஸ்டபிள் ரி அருந்தவராஜா இல 11643)வின் உடலில் 27 வெளிக்காயங்களும் 6 உட்காயங்களும் இருந்தன. இக்காயங்களுள் மூன்று கத்திக்குத்துக்காயங்களும் நான்கு உரசற்காயங்களும்இருந்தன''

இவ்வாறு யாழ். சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சிதம்பரம்பிள்ளை சிவசுப்பிரமணியம் நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில்நடைபெற்ற மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறினுர்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திரு வி பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் 2வது நாளாக நடைபெற்ற மரணவிசாரணையின் போது டாக்டர் சிவசுப்பிரமணியம் மரண விசாரணை அறிக்கையைச் சமர்ப்பித்து தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

'3-7-82 காலை9-30மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் காலஞ்சென்ற கான்ஸ்டபிள்களான ஆரியரத்ன, மல்லவராச்சி, குணபால அருந்தவராஜா ஆகியோரது சடலங்களை பரிசோதனை செய்தேன்.

''பருத்தித்துறை நீதவான் காலஞ்சென்ற திரு கே. எஸ். மகேசனின் பணிப்புரையின் பேரில் இப்பரிசோதனையை மேற்கொண்டேன். எம். ஆர். டி. பி ஜெயவர்த்தன, ஜி எல். ரஞ்சித் ஆகியோர் சடலங்களை அடையாளம் காட்டினர். ஆரியரத்தினவின் உடலில் 9 வெளிக்காயங்களும்

(8ம் பக்கம் பார்க்க)

## கைதான இளைஞர் பிணையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை பயங்கரவாத சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் வவனியாவில் வைத்துப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட நெடுந்தீவைச்சேர்ந்த டிக்சன் ராஜரட்ணம் எனும் இளைஞர் நேற்று யாழ் நீதவான் திரு. ரி ஜோகநாதன் முன்னிலையில் இரகசியப்பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதிமன்றத்திற்குத் தேவைப்படுமிடத்துஇவர் சமுகமளிக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் 5000 ரூபா பிணையில் செல்ல இவரை யாழ். நீதவான் கட்டளையிட்டார். [சி]

## "யாழ்ப்பாணத்தின் தேவை நிறைவேற்றப்படுகிறது"

### செய்தி நிலையம் திறப்பு விழாவில் மாவட்ட அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணத்திற்கு நீண்ட காலமாக இருந்து வந்த ஒரு அவசரத் தேவை இன்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வாசிப்பு ஆர்வமும், தொழில் துறைகளும் அதிகரித்துள்ள இப்பகுதியில் அரசாங்கப் பிரசுரங்கள், வெளியீடுகளைப்பெற முடியாதிருப்பது மிகப்பெரும் குறையாகும். இச்செய்தி நிலையம் இக்குறையை நிவர்த்தி செய்யும் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.''

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கூன் யாழ். செயலகத்தில் நேற்று செய்தி நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''இங்குள்ள அரசாங்கவெளியீடுகளில் சில பிரசுரங்களைப் பொதுமக்கள் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் அரசின் நடவடிக்கைகள், செயற்பாடுகளைப் பொதுமக்களுக்கு அறியத்தருவதற்காக அத்தகைய பிரசுரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

''மாகாண ரீதியில் அரசின் நிர்வாகத்தைப் பன்முகப்படுத்தும் திட்டதின்கீழ் மற்றுமோர் நடவடிக்கையாக இவ்வெளியீட்டுப் பணியகம் திறந்து வைக்கப்படுகிறது.

''வாசிப்பு ஆர்வமுள்ள மக்களும், மாணவர்களும் இங்கு அதிகமாக வசிக்கிறுர்கள். சட்ட அறிக்கைகள், அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாகத் தேவைப்படும் விபரங்களைவழக்கறிஞர்களும், தொழிலதிபர்களும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்'' என்ருர்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு எஸ். நடராசா உரையாற்றுகையில் ''நிர்வாகத்தை மாவட்ட மட்டத்தில் பன்முகப்படுத்துவதென்ற இந்த அரசாங்கத்தின் கொள்கையில் இன்றைய வைபவம் மேலும் ஒரு மைல் கல்லாக அமையும்'' என்று கூறினுர்.

இவ்வைபவத்தில் யாழ். அரசாங்க அதிபரும், மாவட்ட அபிவிருத்திசபைச்செயலாளருமான திரு. தேவநேசன் நேசையாவும் உரையாற்றினுர்.

தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி அபயரத்ன முதலாவது வெளி

(8-ம் பக்கம் பார்க்க)

அரிய சந்தர்ப்பம்
Computer Programming
மீண்டும் ஒரு புதிய பயிற்சி வகுப்பு
ஆரம்பம்: 18-7-82
COBOL - BASIC - FORTRAN - R. P. G II
எமது நிறுவனத்தில் உள்ள Computer இல் ஒவ்வொரு மாணவற்கும் பயிற்சியளிக்கப்படும். O/L அல்லது N.C.G.E.படித்த இருபாலரும் சேரலாம்-நேரில் வரவும்.
நாஷனல் அக்கடமி,
மொம்சாக் கட்டிடம்,
11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
3847

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

முற்றிலும் சீரமைக்கப்பட்டதும் ஜப்பானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டதுமான இசுசு E. L. F. (15 சீட்டுகள்) விபரம்: ஹோட்டல் சுபாஸ், விக்டோரியா வீதி யாழ்ப்பாணம். போன்: 7534. [3785]

வெளிநாட்டு விற்பனையில் முன்னணி வகிக்கும் 'ஸ்வேட்ஸ் தேயிலை' பல ரகங்களில் விற்பனைக்குண்டு. மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும். 115/1/1A ஸ்ரீ முருகன் ஏஜென்ஸி, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (3849)

304, 9 ஸ்ரீ 35 மைல்/கலன் போர்ஜோ கார் விற்பனைக்குண்டு. ரூ. 45,000/- டாக்டரின் சொந்தப் பாவிப்பிலுள்ளது. தொடர்பு: G V. பாலசிங்கம், 'ராணிஸ்தான்'', அச்சுவேலி. (3850)

## தவறிவிட்டது

எஸ். சிவஞானம் இல. 1365 C. T. B. அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி டிப்போவுடன் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். ((3856)

## தேவை

சுன்னாகம் மருதனுமடம், கந்தரோடை பகுதிக்குள் வசதியான வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்க. விளம்பர இல. 3858, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (3858)

மேசன்மார் சகல தரங்களிலும் தேவை. குறைந்தது இரண்டு வருட அனுபவமுள்ளோர் உடனே விண்ணப்பிக்கவும். நல்ல சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்க. விளம்பர இல: 3788, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [3788]

## அறிவித்தல்

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 2000 வெற்றுச்சாக்குகள் 28-7-82 புதன்கிழமை காலை 10மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும். கொள்வனவு செய்ய விரும்புவோர் தயவு செய்து சமுகமளிக்கவும்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்.
12-7-82. (3855)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

சுன்னாகத்தில் வியாபாரஸ்தலம்

### உடன் தேவை

சுன்னாகம் பஸ் நிலையத்திற்கு அல்லது நவீன சந்தைக்கு அருகாமையில் தளத்தில் அல்லது மாடியில் வியாபார ஸ்தலம் ஒன்று குத்தகைக்கோ, விலைக்கோ உடன் தேவை. விபரங்களுக்கு உடன் விண்ணப்பிக்க. விளம்பர இல. 3857, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (3857)

4-வது ஆண்டு

### நினைவாஞ்சலி

அமரர் டாக்டர் சரவணமுத்து சோமசுந்தரம்
(மனப்புலி)
தோற்றம்: 02-11-1912 மறைவு: 27-06-1978
அன்னார் மறைந்து இன்று நான்காண்டு நினைவு தினம்.
அவரின் ஆத்மசாந்திக்காக
இன்று ஒன்றுகூடிப் பிரார்த்திப்போம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கிருஷ்ணு கிளினிக்,
ஆசாத் வீதி, யாழ்ப்பாணம். (3854)

### தேங்காய் விற்பனை

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபைக்குச் சொந்தமான கண்டிவீதி, பளை 173-ம் மைல் கல்லுக் கருகாமையிலுள்ள தர்மக்கேணி—கரந்தாய் தோட்டத்தில் சுமார் 15,000 தேங்காய்கள் உடன் விற்பனைக்குண்டு. மேற்படி தேங்காய்களை தோட்ட அத்தியட்சகரின் அனுமதியுடன் எல்லா வேலைநாட்களிலும் பார்வையிடலாம். தங்கள் கேள்வி விண்ணப்பங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கு 1000 தேங்காய்கள் கழிவில்லாமல் என்ன விலை என்பதைத் தெரியப்படுத்தி உடன் அனுப்பிவைக்கவும். கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் தேங்காய்க்கான முழுப் பணத்தையும் மேற்படி தேங்காய்களை அப்புறப்படுத்துமுன் செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 20-07-82
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
முகாமையாளர்,
பிராந்திய அலுவலகம்,
ம. பெ. அ. சபை,
165, புத்தளம் ரோட், சிலாபம்.
(3853)

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

காரைதீவு மேற்கு பலுகாட்டைச் சேர்ந்த மரணமெய்திய இராமலிங்கம் பொன்னுத்துரை பெண் சரஸ்வதி என்பவரின் மரணசாதனம் மற்றும் எழுத்தாவணங்கள் விடயத்தில்

மரணமெய்தியவர்
மரணசாதன நியாயாதிக்கம் இல. 69

பொன்னுத்துரை சிவஞானம், நாராணிகேணியடி, பலுகாடு, காரைநகர்,

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1982-ம் ஆண்டு ஆடி மாதம் 16-ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக்கட்டளைப்படி

அந்தோனிப்பிள்ளை சிறில்,
பதிவாளர்.

1982-ம் ஆண்டு ஆனிமாதம் 8-ம் நாள்.
மனுதாரின் சட்டத்தரணி:

த. சோமசுந்தரம்,
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்,
93/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம், [3848]

பண்டாரவன்னியன் சிலைதிறப்புவிழா

# சபாநாயகர் பாக்கீர்மாக்கார் வவனியா வருகிறார்

(வவனியா

சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் வவனியா வருகின்றார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரத்தினால் திறந்து வைக்கப்படவிருக்கும் மாவீரன் பண்டாரவன்னியன் சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காகவே அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் வரவுள்ளார்.

இவ்விழாவில் தமிழக சட்டசபை சபாநாயகர் திரு.ராஜாராமும் கலந்து கொள்ளவிருக்கின்றார் என விழா குழுவினர் தெரிவித்தனர்.

சிலை திறப்பு விழாவையொட்டி தொடர்ந்து மூன்று தினங்கள் வவனியா நகரசபை மைதானத்தில் முத்தமிழ் விழா ஏற்பாடாகியுள்ளது.

அத்துடன் கவியரங்கு, பட்டிமன்றம், ஆய்வுரைகள், இலக்கிய சொற்பொழிவுகள் நடைபெறும்.

இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனம் மாவீரன் பண்டாரவன்னியனின் உருவச் இலட்சினையினை வடித்துள்ளது. இது அன்றைய தினம் விற்பனைக்கும், கண்காட்சிக்கும் வைக்கப்படும்.

நகரசபை மைதானத்துக்கு அருகிலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையின் பாடசாலை மாணவர்களுக்கு பயன் தக்க விதத்தில் சனத்தொகை பெருகுவதால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளையும் எதிர் காலத்தில் ஏற்படும் விளைவுகளையும் புள்ளி விபரத்துடன் விளக்கும் மிகவும் பயனுள்ள ஒரு காட்சியினை இலங்கை குடும்பத்திட்ட சங்கம் நடத்தவுள்ளது என வவனியா மாவட்ட குடும்பநல அதிகாரி திரு. கிராங் புஸ்பநாயகம் தெரிவித்தார்.

விழா தொடர்பான மும்மர வேலைகளில் வவனியா எம்.பி. திரு. தா. சிவசிதம்பரம், மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு, எம். சிற்றம்பலம், அரசாங்க அதிபர் திரு. ஸி. லோகேஸ்வரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கமலநாதன் உதவிதிட்டமிடல் பணிப்பாளர் திரு. இலங்காநேசன் ஆகியோர் உட்பட பலர் ஈடுபட்டுள்ளனர். [க]

## பிரதேச அபிவிருத்தி சபை தலைவர்



(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச சபைத் தலைவராக திரு. எஸ். தியாகராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாநகர சபை தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரான திரு. எஸ்.தியாகராஜா, வண்ணார்பண்ணை கிழக்கு கிராமோதய சபையின் தலைவராவார்.

திருக்கேதீஸ்வர ஆலயஅறங்காவலருள் ஒருவரான இவர் யாழ்ப்பாணம் திருவண்ணைநகர் செந்நில் கதிர்வேலாயுத சுவாமி கோவில் பொருளாளரும், நல்லை ஞானசம்பந்தர் ஆதீன ஆலோசனை சபைஉறுப்பினரும், இளம் கலைஞர் மன்றம், யாழ். ரசிகரஞ்சன சபா போஷகரும், நுண்கலை மன்ற உப தலைவரும். பல சனசமூக நிலையங்களின் பாதுகாவலருமாவார்.

யாழ். நூல்நிலைய நிர்வாகக் குழு உறுப்பினரான இவர் நகர அபிவிருத்திக்கும் கலைத்துறைக்கும் நீண்டகாலம் தொண்டாற்றி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

இறந்துவிட்டன: 1. அப்புக்குட்டி மாணிக்கமும்
2. பெண் புஸ்பாவதி, தற்பொழுது மாணிக்கம் கைம்பெண் புஸ்பாவதி 248, புன்னாலை ரோட், வண்ணார் பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.
— வழக்காளிகள்

செல்லத்துரை சச்சிதானந்தம்
31, ஒட்டுமடம் ரோட், யாழ்ப்பாணம்.
— பதில்வழக்காளி

எதிராக

வழக்கு இல: எம். பி 114*8

1. சோமசுந்தரம் கைம்பெண் பொன்னம்மா [இறந்துவிட்டார்]
2. அவவின் சட்டப்பிரதிநிதி 2ம் எதிராளி சோமசுந்தரம் பரராசசிங்கம்
3. சோமசுந்தரம் நாகேஸ்வரி 16, ஓடைலேன், வண்ணார் பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.
4. வைத்திலிங்கம் கைம்பெண் இலட்சுமிப்பிள்ளை சோப்பாய் ரோட், உரும்பிராய், கிழக்கு உரும்பிராய்.
— காலஞ்சென்ற சோமசுந்தரம் வைத்திலிங்கத்தின் மரணச் சொத்துக்களுக்குச் சட்டப்பிரதிநிதி.

மேற்படி வழக்கில் எனக்குக்கிடைத்த விற்பனவுக்கான அதிகாரத்தின்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1982ம் ஆண்டு ஆடி மாதம் 30ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 10,000-00மும் 9-2-1970 தொடக்கம் இறுக்கும்வரை ரூபா 10000/-க்கு நூற்றிற்கு5% வீத வட்டியும் வழக்கு செலவும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை ''இலகடி'' நில. பர. 4. ஆனி 30-09-60ந் திகதி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரி. கந்தையாவால் 828ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தின் படி நில பர. 3 குளி 13¼. இதன் பதிவு டி 258/206. இதில் குறித்த நில அளவைப்படத்தில் 1ம் துண்டென குறிக்கப்பட்ட நில. பர, 1 குளி 15 1/10 வீடும். தசினியும் மற்றும் செய்பயிர் வான்பயிர்களும் குறித்த நில அளவைப்படத்தில் 3ம் துண்டில் இருக்கும் கிணற்றில் அரைவாசியும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கும், தெற்கும் 2ம், 3ம் துண்டு, வடக்கு சிவராசா பெண் தங்கராணிக்குரிய ஆதனமும், திருமதி தில்லையம்பலத்திற்குரிய ஆதனமும், மேற்கு ஓடைலேன். இது யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட ஓடைலேன். 16ம் இறைவரி மதிப்பிலக்கம் கொண்டது.

நீ. அன்ரனிப்பிள்ளை
(விற்பனவு கொமிஷனர்)

22, கோவில்வீதி, யாழ்ப்பாணம். 3851

## புதிய நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்க உத்தியோகத்தர் தலைமையில் நயினாதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது நடப்பு ஆண்டுக்கான நிருவாகிகள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். கிராமோதய சபை உறுப்பினர் திருமதி காந்திமலர் குமாரசூரியர் மீண்டும் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டார்

ஏனைய நிர்வாகிகள் வருமாறு உப தலைவர்கள், திருமதி லெட்சுமி பரராசசிங்கம், திருமதி பரமேஸ்வரி நல்லதம்பி செயலாளர்; செல்வி லோகராணி கிருஷ்ணபிள்ளை உப செயலாளர்: திருமதி கனகாம்பிகை ஜெகநாதன்.
பொருளாளர்: செல்வி ஜெயலட்சுமி இராமலிங்கம். ஏழுபேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

[இ]

## லண்டனில் ரயில்சேவை பாதிப்பு!

# 25,000 பேர் வேலைநிறுத்தம்;

# 17,000 ரயில்கள் ஓடவில்லை

## தினமும் 80 லட்சம் ஸ்ரேலிங் பவுண்ட்நஷ்டம்!

லண்டன், ஜுலை. 13

லண்டன் ரயில் சாரதிகளின் வேலைநிறுத்தத்தை கைவிடுமாறு விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சாரதிகளை சேவையிலிருந்து நீக்கி அச்சேவைகளை நிறுத்திவிடுவதுபற்றி ரயில்வே பகுதி ஆலோசனைசெய்துவருகிறது.

9வது நாளாக நடைபெற்றுவரும் இந்த வேலைநிறுத்தத்தினால் 17 ஆயிரம் ரயில்கள் ஓடவில்லை. இந்த வேலைநிறுத்தத்தினால் தினமும் 80 லட்சம் ஸ்ரேர்லிங் பவுண்ட் நஷ்டம் எனக் கூறப்படுகின்றது.

சிலசாரதிகள் வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளவில்லை. இந்த வேலைநிறுத்தத்தினால் மேற்குப்பகுதி மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே ஊழியர்சங்கத்தில் உள்ள 25,000 பேர் வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியுள்ளார்கள். ரயில்வே சீர்திருத்தங்களை செய்ய எடுத்த நடவடிக்கைகளை எதிர்த்தே இந்த வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. [க]

### ஈரான்-ஈராக் போர்;

## முடிவுக்கு கொண்டுவர ஐ. நா. தீர்மானம்!

லண்டன், ஜுலை. 13

ஈராக், ஈரானின் 22 மாத கால போரை முடிவுக்கு கொண்டுவருமாறு ஐ. நா. பாதுகாப்புசபைகேட்டுள்ளது அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச எல்லைகளுக்கு படைகளை வாபஸ்பெறவேண்டும் என்றும் ஐ. நா. பாதுகாப்புசபை கோரியுள்ளது.

யுத்தநிறுத்தத்திற்கும் துருப்புக்களை வாபஸ்பெறுவதற்கும் ஐ. நா. பார்வையாளர்களை அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [க]

## இந்திய ஜனதிபதி தேர்தல் வியாழன் முடிவுதெரியும்

புதுடில்லி, ஜுலை 13

இந்திய ஜனதிபதி தேர்தலில் 100 வீதமானோர் வாக்களித்தனர். எதிர்வரும் வியாழக்கிழமை வாக்குகள் எண்ணப்பட்டு அன்று இரவு முடிவுகள் அறிவிக்கப்படும்.

ஜனதிபதி தேர்தலில் இந்திராகாங்கிரஸ் சார்பில் திரு. ஜெயில்சிங்கும், எதிர்க்கட்சிகள் சார்பில் திரு எச் ஆர். கன்னுவும் போட்டியிடுகின்றார்கள்.

தமிழ்நாடு சட்டசபையில் உள்ள 234 பேரில் 232 பேர் வாக்களித்தனர்; காலை 10 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பு மாலை 5 மணிக்கு முடிவடைந்தது.

இம்மாதம் 24ம் திகதி ராஷ்டிரபதி சஞ்சீவரெட்டி ஓய்வு பெறுகிருர். 25ம் திகதி புதிய ராஷ்டிரபதி தலைமை நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துபதவிஏற்பார். [க]

## 2,500 ஆண்டு மலைப்பாறை ஓவியங்கள்

சென்னை, ஜுலை 13

2500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் ஓவியங்கள் தென்னுற்காடு, திருக்கோயில் ஐயப்பன்மலைப் பாறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (க)

### ஆர்ஜென்டீனு மீதான

## பொருளாதார தடையை அமெரிக்கா நீக்கியுள்ளது!

வாஷிங்டன், ஜுலை 13

போக்லண்ட் போரினல் கடந்த ஏப்ரல் மாதம் ஆர்ஜெண்டினு மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை அமெரிக்க ஜனதிபதி றீகன் நீக்கியுள்ளார்.

காப்புறுதி, ஏற்றுமதி, இறக்குமதி கடன், பொருட்கள் கொள்வனவு கடன்களுக்கிருந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளது.

இராணுவ ஆயுத விற்பனை தடைபற்றி எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

தெற்கு அத்திலாந்திக் நிலைமையை ஆராய்ந்த பின்னரே இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் நடந்தவற்றை மறந்து ஒத்துழைப்பது அவசியம் என்றும் ஜனதிபதி றீகன் தெரிவித்துள்ளார். (ச)

### 4200 கோடி டாலர்:

## சோவியத் உதவியாக வழங்கியுள்ளது!

மாஸ்கோ, ஜுலை 13

மூன்ருவது மண்டல நாடுகளுக்கு குறைந்தளவு உதவி வழங்குவதாக கூறப்படுவதை சோவியத் மறுத்துள்ளது. சோவியத் தேசியஉற்பத்தியின் 1·3 வீதம் உதவியாக வழங்கப்படுகிறது.

76ம் ஆண்டு சோவியத் ·9 வீத உதவியை வழங்கியது தற்போது இந்த உதவி பன்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

76ம் ஆண்டு முதல் 80ம் ஆண்டுவரை 4200 கோடி டாலர் உதவியாக வழங்கப்பட்டுள்ளன.

ஐ. நா. சபை ·7 வீதம் முன்னேற்ற மடைந்த நாடுகள் உதவியாக வழங்கவேண்டும் என கேட்டிருந்தது. ஆனல் சோவியத் 1 3 சத வீத உவியை வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உதவி [illegible] போதாதென்றும் மார்க்கிஸ[illegible] நட்புறவு நாடுகளுக்கே உதவி வழங்கப்படுவதாகவும், குற்றம்சுமத்தப்பட்டிருந்தது. (க)

## ரயில் விபத்து; 90 பேர் பலி!

லண்டன், ஜுலை 13

மெக்சிக்கோவில் நடந்த ரயில் விபத்தில் 90 பேர் பலியானுர்கள். 164 பிரயாணிகள் காயமடைந்தனர். ரயில் தடம்புரண்டு பள்ளத்தில் வீழ்ந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது. (க)

## 200 புதிய பஸ்கள்!

(கொழும்பு)

மத்திய போக்குவரத்து சபை 200 புதிய பஸ்களை. இப்மாத இறுதிக்குள் சேவையில் ஈடுபடுத்தவிருக்கிறது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 660 சட்டங்களிலிருந்து இப்புதிய பஸ் வண்டிகள் தயாரிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாதமும் 100 புதிய பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)

## பகைமையை நீக்கமுடிவு

லண்டன், ஜுலை 13

போக்லண்ட்மீதான பகைமையை உத்தியோகபூர்வமான முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக பிரிட்டன் அறிவித்துள்ளன.

போக்லண்ட் போரில் சிறைபிடித்த ஆர்ஜென்டீனு கைதிகளை விடுவிக்க பிரிட்டன் இணங்கியுள்ளது. (க)

## லெபனுன் குறித்து மகாநாடு

புதுடில்லி, ஜுலை 13

லெபனுன் பற்றிய மண்டல சார்பற்ற ஒருங்கிணைந்த மாநாட்டில்கலந்துகொள்வதற்காக, பாரத வெளியுறவு அமைச்சர் திரு பி வி. நரசிம்மராவ் நிக்கோசியா சென்றுள்ளார்.

சைப்பிரஸ் தலைநகரில் இக்கூட்டம் 3நாள் நடைபெறும். (க)




RJA - 1829

அருந்துங்கள்
தெம்பூட்டும் மதுரமான
ஒரேஞ் பார்லி
நெக்டோ
தரமுயர்ந்த இரு
யானைமார்க்
குளிர் பானங்கள்
CCS
வ. மா. விலை 2/45
எலிஃபன்ட்
ஹவுஸ்

### மணிவாக்கு

மதப் பிடிவாதக்காரர்களின் மனமானது கண்களைப் போல இருக்கும்; அதாவது கண்களில் அதிக ஒளிபட்டால் அது இறுக்கி மூடிக்கொள்வது போல அவர்கள் மனமும் அந்தச் சமயத்தில் மூடிக்கொள்ளும்.

—ஹோம்ஸ்.

## நமது நோக்கு

# ஆசியநாடுகளின் அணிகலன்

இரண்டாவது உலக மகாயுத்தம் விரைவாக முடிவதற்கு ஹிரோஷிமாவில் விழுந்த அணுக்குண்டுகளே முக்கிய காரணம்.

'சூரியோதய' நாடுஎன்று வர்ணிக்கப்பட்ட யப்பான் அஸ்தமித்து விட்டதோ வெனப் பலர் முடிவு கட்டினர். ஆசிய கண்டத்தின் அதிவாரக்கல்லாகக்கணிக்கப்பட்ட யப்பான் வாங்கிய 'அடி' ஆசிய நாடுகளுக்கு ஒரு அவமானமாகத்தான் நிற்று. அணுசக்தியின் தந்தையாகிய விஞ்ஞானமேதை ஐன்ஸ்டயின் அப்போது அமெரிக்காவில்வசித்தவர். இந்தநாசவேலையைக் கேள்வியுற்று கண்ணீர் விட்டார் அமெரிக்கா கவலைப்பட்டதா என்ற கேள்விக்கு அவசியமில்லை.

இன்று 35 வருடங்களுக்குப்பின் நிலைமை என்ன? உலகின் பொருளாதாரநிலையில் முதலிடம் வகிக்கும் யப்பான் இந்த நிலைக்குவர இவ்வளவு காலம் தேவைப்பட்டிருக்கவில்லை; பத்து வருடத்துக்குள் பழைய நிலையை எய்திய நாடு இன்று உலகத்தின் பெரிய விஷயங்களுக்கு உறைவிடமாக விளங்குகிறது.

இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பின் தினசரி செய்தியில் முதல் இடம் இந்த நாட்டுக்கு கொடை அல்லது கடன் உதவி வழங்கும் ஸ்தாபனங்கள் அல்லது நாடுகளின் பட்டோலை வாசித்தல். அமெரிக்கா தொடக்கம் இங்கிலாந்து, நோர்வே, சுவிற்சலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி முதலிய ஐரோப்பிய நாடுகள், ஆசிய நாடுகளில் யப்பான் இந்தப் பதிவேட்டில் முதலிடம்பெறுகிறது.

பண்டாரநாயக்கா ஆட்சியில் நவீன ஒரு பிரமான ஞாபகார்த்த மண்டபத்தை கட்டி வழங்கியது; ஜெயவர்த்தன ஆட்சியில் யப்பான் பெருந்தொகையான நிதியையும் ஒரு பிரமாண்டமான மருத்துவ மனையையும் உதவ முன்வந்திருக்கிறது; இன்னும் பல வகை சலுகைகள்!

உண்மையில் நவீனவும் யப்பானும் ஆசிய மக்கள் அடிமை இனங்கள் என்ற ஐரோப்பிய தப்பெண்ணத்தைஅகற்றும் பெருமை பெற்ற நாடுகள்.

உலகின் தொழில் நுட்ப முன்னேற்றமும், வர்த்தக வளர்ச்சியும் அமெரிக்காவில் வேகமடைந்திருப்பதை நாம் காண முடிகிறது ஆனல் எங்கு நிகழும் எந்தக் கண்டுபிடிப்பும் அடுத்த வாரத்தில மிகத்திறமையாகத் தமது ஆக்கிக்கொள்ளும் திறம் யப்பானிய விஞ்ஞானிகளுக்குண்டு.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்'' என்ற வார்த்தைக்கு முழுப்பொருளையும் கண்டவர்கள் பவனந்தியர், பாரதியார் நாட்டில் வாழும் மக்கள் அல்ல; யப்பானியர்களே! பழமையான கலாசாரம் மிகுந்த நாட்டில் புதியன புகுந்து எந்த அளவுக்கு மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறதென்பது பாரிஸில் லண்டனில் ஜெர்மனியில் – ஏன் அமெரிக்காவிலும் காணலாம்.

ஆங்கில, பிரெஞ்சு, ஜெர்மானிய மக்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் மோட்டார்கார், மோட்டார்சைக்கிள் முதலியன வாங்கும் சக்தியற்று, ஜப்பான் உற்பத்திப் பொருட்களையே பெருமளவில் வாங்குகின்றனர், பல தொழிற்சாலைகள் அங்கு இதன் விளைவாக மூடப்படுகின்றன.

யப்பானிய பொருட்கள் விலை குறைந்தவை இளக்கமானவையென்ற பண்டைய நம்பிக்கை பறந்து விட்டது. தரத்தில் எவ்வித குறைவுமின்றி நிதானமான விலையே இந்த நிலைகளுக்குக்காரணம்.

உலகத்தின் மிகப்பெரிய நகரம், உலகத்தின் மிகப் பெரிய டவர்; உலகத்தின் மிகப்பெரிய கப்பல், உலகில் மிகவேகமாக ஓடும் ரயில், இவ்வாறு அடுக்கிக் கொண்டு போவதெல்லாம் எந்த நாட்டைப் பற்றி? அமெரிக்காவை விட இருபது மடங்கு சிறிய நாடு —யப்பான், இந்தியாவை விட எட்டுமடங்கு சிறிய நாடு அது.

இந்த அற்புத சாதனையின் அடிப்படை உண்மை தமிழ் முனிவர் உலகத்துக்கு வழங்கிய உண்மைகளில் ஒன்று.

உடையர் எனப்படுவது ஊக்கம் அஃது இல்லார் உடையது உடையரோ மற்று

விடிந்தெழும்பினல் பத்திரிகையைப் புரட்டுவதும் அரசியல் பேசுவதுமே முழுநேர வேலையாகக் கொண்ட எங்களுக்கு இது ஒரு பரிகாசமாகத் தோன்றும்.

மத்திய கிழக்கு, போக்லந் பிரச்னை, இளவரசர் சார்ல்ஸ் திருமணம், இளவரசர் தம்பதிகளின் ஆண் குழந்தை போன்ற பெரிய சிறிய உலக விடயங்கள் யப்பானிய மக்களைக் கவர்வதில்லை. அரசியல் பேசுவது பொதுவாக அவர்கள் பழகாத பழக்கம்.

உழைப்பு திறமைவாய்ந்த உழைப்பு; அரசியல் அரசியல் வாதிகளிடம்; பொருள் உற்பத்தியே யப்பானிய மக்களின் முக்கிய முயற்சி; ஊக்கம் நிறைந்த உள்ளம் படைத்தவர்கள் யப்பானியர்; எனவே எந்த அழிவிலும் மறு பிறப்பெடுக்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள்!

யப்பானில் உள்ள அதிசய தொழிற்சாலைகளைப் பார்வையிடுவதில் இரண்டு சிரமங்கள்; இவை எங்களின் கீழ் நிலையை விளக்க வல்லவை.

அவர்களுடன் பேசும் வாய்ப்பு அரிது; காரணம் ஒன்று; அவர்களுக்கு நேரம் கிடைக்காது. இரண்டு. மொழிப் பிரச்னை; ஆங்கிலம் படித்த விஞ்ஞானத்தில் முன்னேறலாம என்ற அர்த்தமற்ற பேச்சில் காலம் கழிக்கும் முட்டாள்களுக்கு, ஜப்பானிய மக்கள் தகுந்த பாடம் படிப்பிக்கின்றனர்; தொழில் திறமை, உழைக்கும் சக்தி – இவற்றுடன் அந்நிய ஆங்கில அறிவும் சேர்ந்துவிட்டால்யப்பானிய மக்கள் செய்ய முடியாத காரியம் ஏதும் உண்டா?

## "பிரெஞ்சு மொழிகற்பதனல்

# சர்வதேச ஸ்தாபனங்களில் வேலைவாய்ப்புக்கு இடமுண்டு"

-- யோகேஸ் எம். பி.

(யாழ்ப்பாணம்)

''தமிழ் இளைஞர்கள் பிரெஞ்சு மொழியைக் கற்று வருவதால் ஹோட்டல்களிலும் சுதந்திரவர்த்தக வலயம் போன்ற சர்வதேச ஸ்தாபனங்களிலும் வேலை வாய்ப்புகளைப் பெறக்கூடியதாக இருக்கிறது. இதற்கு யாழ்–பிரெஞ்சு நட்புறவுச்சங்கம், தமிழ் இளைஞர்களுக்கு பிரெஞ்சு மொழியைக் கற்க உதவி புரிந்து வருகிறது'' என்று யாழ். எம் பி. திரு. வெ. யோகேஸ்வரன்ன், யாழ்ப்பாணத்திலுள்ள பிரெஞ்சு நட்புறவுச் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

சங்கப்பணிமனையில் திரு ரெஜேஸ் ஜெயம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு பிரெஞ்சு தூதரக பண்பாட்டுத்துறை ஆலோசகர் திரு. அந்ரே ஜெரால்ட், பிரெஞ்க நட்புறவுச் சங்கத்தின் பிரதம அதிபர் திரு கோதியேர் வில்ம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் பேசுகையில், சர்வதேசப்புகழ் பெற்ற பிரெஞ்சுத்திரைப் படங்களை மீண்டும் யாழ்ப்பாணத்தில் காண்பிக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

பிரெஞ்சு நட்புறவுச்சங்கத்தின் மாஅதிபர் திரு கோதியேர் வில்ம் பேசுகையில், பாரிஸ் நகரில் இருக்கும் பிரெஞ்சு நட்புறவுச் சங்கத்தில் இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் உட்பட சுமார் ஆயிரம் இளைஞர்கள் பிரெஞ்சு மொழியைக் கற்று வருகிறார்கள் எனத் தெரிவித்தார்.

''யாழ்ப்பாணத்திலும் மீண்டும் பிரெஞ்சு சர்வதேச திரைப்படவிழாவை நடாத்த முடிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்ட திரு கோதியோவில்ம், யாழ்ப்பாணத்திலுள்ள பிரெஞ்சு நட்புறவுச்சங்கத்தை முன்னேற்றுவதற்கு ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

இந் நட்புறவுச் சங்கத்தின் செயலாளர் செல்வி அமிர்தநாதர் பிரெஞ்சு மொழியில் நன்றிதெரிவித்துப் பேசினர். (மா)

## "விடுதலை இயக்கங்களை இணைத்து

# வடக்கில் கூட்டணியை எதிர்த்து சுயாட்சிக்கழகம் போட்டியிடும்"

### துணைச்செயலாளர் கூறுகிறர்

(யாழ்ப்பாணம்)

பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்து தமிழர் சுயாட்சிக் கழகம் வடமாகாணம் முழுவதும் பரந்த அடிப்படையில் போட்டியிடும். தமிழ்மக்களின் விடுதலை இலட்சியம் கொண்ட இயக்கங்களை ஒன்றிணைத்து, எதிர்வரும் தேர்தலில் போட்டியிட சுயாட்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது''

தமிழர் சுயாட்சிக்கழகத்தின் துணைச்செயலாளர் சட்டத்தரணி திரு. ந சிறிகாந்தா, ஊர்காவற்றுறையில் நடந்த அமரர் பத்மநாதன் நினைவுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை தமிழர் சுயாட்சிக்கழகத்தின் பணிமனை மண்டபத்தில் சட்டத்தரணி இ. சபேசன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு சிறிகாந்தா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: தமிழர் சுயாட்சிக்கழகத்திற்கு மீண்டும் அரசியல்கட்சி அங்கீகாரம் மறுக்கப்பட்டுள்ளது. எமக்கு அரசாங்க அங்கீகாரம் மறுக்கப்பட்டுள்ளது. எமக்கு அரசாங்க அங்கீகாரம் முக்கியமானதல்ல. தமிழ்மக்களின் அங்கீகாரம் மட்டும் இருந்தால் போதும். மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு 1969ல் ஸ்தாபனரீதியாக இயங்க ஆரம்பித்த தமிழர் சுயாட்சிக்கழகம் கடந்த பதின்மூன்று வருடங்களில் இரண்டு பொதுத்தேர்தல்களைச் சந்தித்துள்ளது.

1965ல் தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ்கட்சி இரண்டும் ஐக்கியதேசியக்கட்சியுடன் இணைந்து தேசியஅரசாங்கம் அமைத்து பதவிகளை வகித்த காலத்திலேதான் அமரர் பத்மநாதன் போன்றவர்கள் சிங்களம் படிக்க மறுத்தகாரணத்தால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். அப்போது தமிழ் இனத்திற்கு இதுபோன்ற பல சோதனைகள் உருவாகிதை தமிழ்மக்கள் மறந்துவிடவில்லை''.

தமிழர் சுயாட்சிக்கழக பொதுச்செயலாளர் திரு. செ. கோடீஸ்வரன், சட்டத்தரணி த. சோமசுந்தரம், சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம், திரு பா சண்முகநாதன், திரு. க, கருணாகரன், திரு. அ நவநாதன் ஆகியோரும் பேசினர்கள். (வண் நி)

## மக்கள் கருத்து

### யாழ். வாசகரின் தாகம் தணியுமா?

தென்கிழக்கு ஆசியாவிலேயே புகழ்பெற்ற பாரிய எமது யாழ். நூல்நிலையம் பிலேச்சர்களினல் அக்கினியுடன் சங்கமமாகி ஒருவருடம் முடிவடைந்தது. ஆனல் இதுவரை காலமும் யாழ். வாசகரின் கல்வித் தாகம் தற்காலிகமாகவாவது தீர்வுறுமலிருக்கிறது. பதிலாக குக்கிராமங்களில் அமைந்துள்ள நூல்நிலையங்களிலும் சிறிய அளவினையுடைய ஒரு அறையிலேயே மாநகரசபைக் காரியாலயத்தில் பத்திரிகைகள் வாசகர்கூடம் அமைந்துள்ளது. அங்கு துவிச்சக்கரவண்டிகள் வாகனங்கள் விடுவதற்குத் தானும் வசதியில்லை. அத்துடன் வாசகருக்குப் பலவித மானவசதியீனங்களும் உண்டு நூல் நிலையத்திற்கு மூன்று மாடிக் கட்டடம் கட்டி முடிக்கும்வரை வாசகர்கள் பொறுத்திருந்து கஷ்டம் அனுபவிக்க வேண்டுமா? பொதுமக்களாலும் மற்றையோராலும் நூல் நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட நூல்கள் சிறையுள் கைதிகலிருந்து வாடுமாப் போல் இருக்கவிடாது தற்காலிக அடிப்படையிலாவது இயங்குவதற்கு உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது நூல்கள் அன்பளிப்போர் மட்டும் நூல்நிலை

(5–ம் பக்கம் பார்க்க

# அனுமதியின்றி மரம்கடத்தல் டிராக்டர்சாரதி பிணையில்

(புலோலி)

உத்தரவுப் பத்திரமின்றி சுமார் 5000 ரூபா பெறுமதியான காட்டுமரங்களைக்கடத்தி வந்ததாகக் கூறப்படும் டிராக்டர் சாரதியொருவர் இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

அம்பனைச் சேர்ந்த நடேசு கோடீஸ்வரன் என்பவரே இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டவராவார்.

டிராக்டரும் சாரதியும்பருத்தித்துறைப் பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிசார் இச்சந்தேகநபரை பருத்தித்துறை நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்தபோது நீதவான் 1000 ரூபா பிணையில் செல்லுமாறுஉத்தரவிட்டார். மரமும் டிராக்டரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. (இ)

## றமழான் சிந்தனை

''உங்களுக்கு முன்னிருந்தவர்கள்மீது விதிக்கப்பட்டிருந்தவாறே உங்கள் மீது நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கிறது.(அதனல்) நீங்கள் பரிசுத்தவான்களாகலாம்.''

ஸஹர் முடிவு– 4 27

நோன்பு திறக்கும் நேரம்: 6. 31

தொகுப்பு:

சுல்பிக்கா–கெள

## பெரியபுராணச் சொற்பொழிவுகள்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்றுவரும் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவில் இன்று தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் சிவத்திரு பாவலர் பால் வண்ணனரின் சொற்பொழிவும், அளவெட்டி அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களின் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

# கிளிநொச்சி செய்திகள்

கே. வி. சே. திருநலோசமூர்த்தி

கிளிநொச்சிப் பிரதேச காந்திய இயக்கத்தினர் கடந்த 6ம் திகதி முதல் பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி வருகின்றனர். இம் மாதம் 25ம் திகதி முடிவடையும் இ விழா இப்பகுதியில் உள்ள பதினைந்து கிராமங்களில் நடைபெறுகிறது இதுவரை உருத்திரபுரம், ஜெயந்திநகர், காந்திநகர், ஆகிய இடங்களில் இவ்விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

வட்டக்கச்சி, முரசுமோட்டை, ஸ்கந்தபுரம், இரணைமடு, சிவநகர், திருநகர், இராமநாதபுரம், பூநகரி வன்னேரிக்குளம், கண்டாவளை ஆகிய கிராமங்களிலும் இவ் விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ் விழாக்கள் அனைத்துக்குமான ஏற்பாடுகளை மேற்படி இயக்க அமைப்புச் செயலாளர் திரு. ப. வை ஜெயபாலன், தலைவர் திரு. நா. சோதிநாதன் ஆகியோர் செய்துள்ளனர்.

## பளைப்பிரதேச சபைத்தலைவர்

பளைப்பிரதேச சபைத் தலைவராக தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த திரு. என். செல்வராசா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் உதவி அரசாங்க அதிபர் திரு ஆர். முருகவேள் தலைமையில் நடைபெற்ற இத் தெரிவின் போது இப்பகுதியின் 10 கிராமோதய சபைத் தலைவர்களும் சமூகமாகி இருந்தனர்.

## கூட்டுறவு தினவிழா

கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் கூட்டுறவு தின விழாவை வெகு சிறப்பாக கொண்டாடினார்கள். இச் சங்கத் தலைவர் திரு. இ. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் இயக்குநர் சபை உறுப்பினர்களும், ஊழியர்களும் ஒருங்கிணைந்து மேற்படி சங்கத்தில் சிரமதான வேலை ஒன்றையும் மேற்கொண்டனர்.

## விளையாட்டுத்துறையில் சிறந்த வசதிகள் வேண்டும்

மிகவும் பின்தங்கிய பிரதேசங்களின் கல்வி அபிவிருத்தியில் அரசு கூடுதல் கவனம் செலுத்திவருகிறது என்று யாழ். மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. எம். எம். மன்சூர் அக்கராயன் மகாவித்தியாலய மெய்வல்லுநர் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி வித்தியாலய அதிபர் திரு. த. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு மன்சூர் மேலும் பேசுகையில்:—

கஸ்டமான இடங்களில் போதிய விளையாட்டு உபகரணங்கள், நல்ல விளையாட்டு மைதானம்இல்லாததால் விளையாட்டுப்போட்டிகளை நடத்துவது மிகவும் சிரமமாயுள்ளது. இன்றைய கல்வி அமைப்பின்படி விளையாட்டுக் கல்விக்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் விளையாட்டில் ஈடுபடுவதன்மூலம் மாணவர்களின் உடல், உள்ளம் வளர்ச்சியடைகிறது என்பதால்தான்' என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி எம். பியின் செயலாளர் திரு. இ கிருஷ்ணராஜா பேசுகையில், கிளிநொச்சிப் பிரதேசக் கல்விப் பிரச்னைக்கு விரைவில் ஒரு சுமூக முடிவுகாண கல்விப் பகுதியினர் முன்வரவேண்டும் என்றும், பல்வேறு இன்னல்கள் மத்தியில் இப்பகுதி ஆசிரியர்கள் சிறந்த சேவையாற்றி வருகிறார்கள் என்றும், இவர்களின் நல்ல மனோபாவத்தை நாம் மதிக்கவேண்டும் என்றும் கூறினார்.

கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு இரா சின்னத்தம்பி பேசுகையில்: ''இப்பகுதி பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகள் நகர்ப்புறப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளுக்குச் சமமாகவே இருக்கிறது. போதிய வசதிகளும் வாய்ப்புகளும் இருக்குமா [illegible] ளுப [illegible] குள்ள மாணவர்கள் பிரகா [illegible] முடியு [illegible] னூர் [illegible] அரசினர் மருத்துவ அதிகாரியும் வெளி [illegible] நபுணரு மா கிய டாக்டர் பி எ சூ இவ் விழாவை ஆரம்பித்து வைத்தார். திருமதி சூ [illegible] ரிசில்களை வழங்கினார். விளையாட்டுத் துறைச் செயலாளர் திரு நா. நடராசா நன்றியுரை கூறினார்

## தண்ணீர் வரி அதிகரிப்பால் விவசாயிகள் கஷ்டமாம்

''கிளிநொச்சிப் பிரதேச விவசாயிகள் விவசாயப் பகுதியினரின் சில நடவடிக்கைகள [illegible] வு [illegible] தடபடை ந் து [illegible] ணீ [illegible] ம் முறை ஆயிரம் ரூபாவுக்குமேல் மேலதிக வரியாகக் கட்ட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்காளாகியுள்ளோம். இவற்றிற்கெல்லாம் தீர்வுகாணவேண்மானால் விவசாயிகளாகிய நாம் ஐக்கியப்பட்டு ஏகோபித்த முறையில் [illegible] வேண்டும்.''

மேற்கண்டவாறு கிளிநொச்சி குடியேற்ற விவசாயிகள் சங்கத்தை [illegible] செய்து உரையாற்றுகையில் ஆசிரியர் திரு. ம. சு. தம்பிநாயகம் குறிப்பிட்டார்.

உருத்திரபுரத்தில் திரு. ப. சேதுபதி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நா. பசுபதிப்பிள்ளை, திரு. சோ. உமாபதிசிவம், திரு. ந. பெனடிக்ற் ஆகியோ [illegible] உரையாற்றினார்கள்.

## கிளிநொச்சியில் விளையாட்டு விழா

கிளிநொச்சி இளம் பறவைகள் விளையாட்டுக் கழக வருடாந்த விளையாட்டு விழா றெட்றிக்கோ விளையாட்டரங்கில் நடைபெற்றது. கழகத் தலைவர் திரு. பா. கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிளிநொச்சி எம். பி. யின் செயலாளரும், முன்னாள் பட்டின சபைத் தலைவருமான திரு. இ. கிருஷ்ணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [அ]

## ''நிரந்தர நூல் நிலையம் வேண்டும்''

கிளிநொச்சிக்கென நிரந்தர நூல் நிலையம் ஒன்றை அமைக்குமாறு கிளிநொச்சி பிரதேச மாணவர் ஒன்றியத்தினர் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவரை கேட்டுள்ளனர் தற்போது தற்காலிக கட்டிடத்தில் நூல நிலையம் இயங்குவதைச் சுட்டிக்காட்டி விரிவான மகஜர் ஒன்றை இவ் ஒன்றியத் தலைவர் திரு [illegible] மாவட்ட சபைத் தலைவர் திரு. சு நடராசாவுக்கு அனுப்பி வைத்துள்ளார். (அ)

## பெண்கள் பங்கு அவசியம்''

(மட்டுவில்)

''கிராமங்களின் அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பு அவசியம். எமது கிராமங்களின் பொருளாதார அபிவிருத்திக்காக பெண்கள் தமது ஓய்வு நேரத்தைப் பெரிதும் பயன்படுத்த திடசங்கற்பம் செய்து கொள்ளவேண்டும்''.

இவ்வாறு தென்மட்டுவிலூர் வேரற்கேணி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் புனரமைப்பு வைபவத்தில் உரை நிகழ்த்திய தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா கேட்டுக்கொண்டார்.

மட்டுவில் கிராமசேவைஅலுவலர் திரு. ரி. இரத்தினராஜா தலைமையில் நடைபெற்றஇந்த வைபவத்தில் வேறுபலரும் உரையாற்றினர்.

## திருமுருகாற்றுப்படை நூலை மீளப் பதிப்பிக்க முயற்சி

[சுழிபுரம்

அருணகிரிநாதர் இயற்றிய திருமுருகாற்றுப் படை நூலை மீண்டும் பதிப்பிக்குப் பணியில் ஏழக்கம்பரை சனசமுக பஜனைச் சபை நூல் வெளியீட்டுக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

பறுளை முருகன் தேர்த் திருப்பணிக்கு இந்நூல் விற்பனை மூலம் வரும் பணத்தை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நூல் அச்சிடும் சகல செலவையும் சுழிபுரத்தைச் சேரந்த ஒருவர் வழங்க முன்வந்துள்ளார். (க)

## கந்தபுராணப் பூர்த்தி விழா

(சுழிபுரம்)

கந்தபுராணப் பூர்த்தி விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்துமணிக்கு பண்ணாகம் விசவத்தனை முருகன் கோவிலில் நடைபெறவுள்ளது

விசேட பூசை, ஆராதனையைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எழுதிய கந்தபுராண வசன காவியத்தை 45 நாட்களும் தினமும் பண்டிதர் அ ஆறுமுகம், ஆசிரியர் இ ஆறுமுகம், திரு. சோ க வேலாயுதர் ஆகியோர் வாசித்து வந்தனர். (இ)

## யாழ். வாசகரின்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

யத்துள் அனுமதிக்கப்படுகிறார்கள் மேலும் எமது நூல்நிலையத்திற்கு நடைபெற்ற அனைத்தங்களை இதுவரை பார்வையிடாத பொதுமக்கள் பார்வையிட்டு தமது அன்பளிப்புக்களையும் பங்களிப்புக்களையும் நல்குவதற்கு வழிசெய்யவேண்டும். நூல்நிலையத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள அதிக சேதமுறாத வாசகர் பகுதி உடனடியாகத் தற்காலிகமாகவாவது வாசகர்களுக்கு ஓரளவு வசதியுடன் சீர்செய்து மாநகரசபை அலுவலகத்தில் இயங்கும் வாசகர் பகுதி யாழ் நூல்நிலையத்திற்கு இடமாற்றப்படவேண்டும். முடியாத கட்டத்தில் தற்காலிகமாக நல்லூர் கல்யாண மண்டபத்திலாவது அல்லது வேறு வீடுகளை வாடகைக்கு அமர்த்தியாவது உடனடியாக நூலகம் பரவலாகவாவது செயற்படுவது, பல்கலைக் கழக மாணவருக்கும் மற்றும் வாசகருக்கும் நன்மை பயக்கும். இதற்குத் தறபோதைய யாழ். நூலகர் திருமதி ஆர். நடராசா முன்னைய யாழ். நூல் நிலைய நூலகர் திரு. வே. இ. பாக்கியநாதன், யாழ். பல்கலைக் கழக நூலகர் திரு சி. முருகவேள் மற்றும் எமது கல்விமான்கள் சகலரும் எமது சமுதாய நலன்கருதித் தமது முற்றுமுழுதான உதவிகளை நல்கவேண்டும். இதற்கு உரியவர்கள் இனிமேலும் காலம் தாழ்த்தாது உடன் நடவடிக்கை எடுத்து வாசகரின் தனியாத கல்வித் தாகத்தைத் தீர்க்க வழிசெய்யவேண்டும்.

க. சி. இராஜேஸ்வரன்,
ஆடியபாத வீதி,
நல்லூர்.


### வாடகைக்கு

யாழ். பெரியகடையில் இருந்து இரு (2) மைல்களுக்குள் வீடு/அல்லது வீட்டின் பகுதி (Annexe) அல்லது ஒரு அறை தனி நபருக்கு வாடகைக்குத் தேவை. தொடர்பு: Jaffna Property Trades Ltd, 3, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம். Phone: 7698

T. V. ஏரியல் அமைப்பில்
முதன்மைமிக்க ஸ்தாபனம்
சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை
T V யில் சிரமமின்றி பார்க்க
உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.
நொடிப்பொழுதில், T V ஏரியல்
கோளாறுகள் சரி செய்யலாம்.
எமது பராமரிப்பு சேவை
24 மணி நேரமும் செயல்படுகின்றது
சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில்
எடுப்பதற்கு
குறைந்த கட்டணம்
பல்வேறு TV செட்டுகளை
பினான்ஸ் வசதியுடன் பெறலாம்.
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் முன்,
யாழ்ப்பாணம்.

குவியல் குவியலாக கிழங்கு விளைய, மன்ஸேற் 200 பாவியுங்கள்




உருளைக் கிழங்கு செய்கை பண்ணும் விவசாயிகள்
பரந்து செயல்படும் மன்ஸேற் 200 பூஞ்சனக்கொல்லியில் மிகுந்த
ஆர்வம் காட்டத் தொடங்கி யுள்ளனர். பயிர்களை முற்றாக
நாசஞ்செய்யக்கூடிய பங்கசு நோய்களையும்
பயிர் அழுகி மடிவதையும் தடுத்து, செழிப்பான வளர்ச்சிக்கும்
அமோக அறுவடைக்கும் வழிகோலுகிறது மன்ஸேற் 200.
உருளைக் கிழங்கிற்கு மட்டுமன்றி தக்காளி,
காய்கறி, பழவகை, மிளகாய் முதலிய பயிர்களுக்கும்
உன்னத பாதுகாப்பு மன்ஸேற் 200.
LANKEM
லங்கெம் சிலோன் லிமிட்டெட்
760, 762, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9,
Grant, K & E 3941
தொலைபேசி: 598292 - 6
விலை: 1.36 கி. கிறும்ஸ் ரூபா 194/-
500 கிறும்ஸ் ரூபா 74/-

## உப அலுவலகங்கள்:
# மின்பொருட்களை பெறுவதில் அக்கறை காட்டுவதில்லை
### - அபிவிருத்திசபை உறுப்பினர்

(பண்டத்தரிப்பு)

'யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை தனது பகுதியிலுள்ள கிராம, பட்டின உப அலுவலகங்களுக்கு மின்சாரப் பொருட்களை முறையாக வழங்குவதில்லை என்று மக்கள் மத்தியில் தவறான கருத்து நிலவிவருகின்றது. மின்சாரப் பொருட்கள் உட்பட மற்றைய சகல பொருட்களையும் எமது சபை உப அலுவலகங்களுக்கு முறையாக வழங்கி வருகின்றது. ஒரு சில உப அலுவலகங்கள் இப்பொருட்களைச் சபையிடமிருந்து உடனுக்குடன் பெற்றுக்கொள்வதில் சிரத்தை காட்டுவதில்லை என்பதை இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.'

இவ்வாறு பண்டத்தரிப்பு கிராமோதய சபையின் விசேட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்னர் திரு. ச. பூபாலசிங்கம் குறிப்பிட்டார் சபைத் தலைவர் திருமதி பேர்ளி அத்தனாசியார் தலைமையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மயன்று இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான உறுப்பினர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு உப அலுவலகப் பிரதேசத்தில் மின்சார விநியோகத்திலுள்ள பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி காரசாரமான கண்டனங்களைத் தெரிவித்தார்கள். மின்சாரம் அடிக்கடி சில பகுதிகளில் துண்டிக்கப்படுவதாகவும், வீதிகளிலுள்ள மின்விளக்குகள் பழுதடைந்தால் அதற்குப் பதுல மின் பல்புகள் பொருத்தப்படுவதில்லை என்றும் இது பற்றி பண்டத்தரிப்பு உப அலுவலகத்தில் சென்று விசாரித்தால் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை மின்சார பல்புகளையும் ஏனைய பொருட்களையும் காலாகாலத்தில் தமக்கு அனுப்புவதில்லை என்றும் கூறப்படுகிறது என்றும் இந்த உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் பலத்த கண்டனம் தெரிவித்தனர்.

யா. மா. அ. உறுப்பினர் திரு. பூபாலசிங்கம் இதற்குப் பதிலளித்துத் தொடர்ந்து கூறியதாவது:-

'வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய அலுவலகங்களில் மின்சார விநியோகம் பற்றி எவ்வித புகார்களும் எமக்குக் கிடைப்பதில்லை. ஆனால் இங்குமட்டும் இப்படியான புகார்கள் அடிக்கடி எமக்குக் கிடைத்துவருகின்றன. வீதியிலுள்ள மின் பல்புகள் பழுதடைந்தால் அதற்கு கிட்டவுள்ள பொதுமக்கள் தமது சொந்தச் செலவில் மாற்ற மின்பல்புகளை வாங்கிக் கொடுத்து எரியச்செய்யவேண்டிய நிலையும் இப்பகுதியில் நிலவுவதாக இங்கு புகார் தெரிவிக்கப்பட்டது. இப்போது எமது யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை மின்சாரப் பொருட்களை தாராளமாக வழங்கிவருகின்றது. இவற்றை உங்கள் பகுதியிலுள்ள உப அலுவலகத்தினர் காலாகாலத்தில் கேட்டுப்பெற்றுக்கொள்ள வேண்டும். இதை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ளாமல் இருந்துவிட்டு அபிவிருத்திச் சபை மீது குற்றம்சாட்டுவது சரியானதல்ல. மேலும் எமது சபையின் சீல் பொறிக்கப்பட்ட பல்புகள் இப்பகுதியில் தனியார் கடைகளில் விற்கப்படுவதாகவும் எனக்கு அண்மையில் ஒரு புகார் வந்தது இன்று மின்சாரம் மக்களுக்கு அத்தியாவசியமானதொரு சாதனமாக மாறிவிட்டது. ஆகவே இதுபற்றி நாம் அக்கறை செலுத்த வேண்டும். ஊழியர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து கடமையாற்றவேண்டும்.'

இக்கூட்டத்தில் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக மேற்பார்வை அதிகாரி திரு. எம். மயில்வாகனம், சுகாதாரப் பரிசோதகர் திரு. என். மாணிக்கவாசகர் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்கள்.

பட்டின சுத்திகரிப்பு தொழிலாளர்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பை இனிமேல் சுகாதார பரிசோதகா பொறுப்பில் விடுவது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. வேறு பல தீர்மானங்களும் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. சார்பில் அவரது செயலாளர் திரு நாக. பத்மநாதன் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

வவனியா உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு. ஏ எஸ். குணரத்தினம் இலங்கை உதைபந்தாட்டக் கட்டுப்பாட்டுச் சபையினுல் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியாளராக நியமிக்கப் பட்டுள்ளார். அகில இலங்கை ரீதியில் 44 பயிற்சியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியாளர்களாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். இலங்கையில் உதைபந்தாட்டப் பயிற்சியாளர்களுக்கு உத்தரவுப்பத்திரம் வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

திரு. குணரத்தினம் சர்வதேச உதைபந்தாட்ட மத்தியஸ்தராகவும், இலங்கைஉதைபந்தாட்டப் பயிற்சியாளர் சங்க உதவிச் செயலாளராகவும் இருந்துவருகிறுர். முதன் முதல் இலங்கையில் பெண்களுக்கான உதைபந்தாட்டத்தை அறிமுகப்படுத்திய வரும் இவரே. இவர் நயினுதீவைப் பிறப்பிடமாகவும், யாழ். கொட்டடி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்டவர். (நயினை. நிரு.)




உன்னத தரத்தின் உயர் சுவை-
உலகெங்கும்!

சுவிட்சர்லாந்து முதல் ஹொங்கொங் வரை, இத்தாலி முதல் மேற்கு இந்தியத் தீவுகள் வரை, உலகெங்குமுள்ள மக்களின் அபிமானம் பெற்றது இனிப்பூட்டிய மில்க்மெயிட் கட்டிப் பால்.

மில்க்மெயிட அதி சுத்தமானது, அதி மிருதுவானது, அதி சுவை மிக்கது-ஏனெனில் அது உடன் கறந்த பசுவின் பாலில் உங்களுக்கென்றே தயாரித்தது. அத்துடன் அது கெட்டித்த செறிவு மிகுந்து விளங்கக் காரணம், சர்வ தேச உயர் தராதர விதிகளுக்கமைய நெஸ்லே நிறுவனம் அதைத் தயாரிப்பது தான்

மில்க்மெயிட் சிக்கனமும் மிக்கது. ஏனெனில் அது முன்னரே இனிப்பூட்டியது. எனவே, கோப்பைக் கணக்கில் அதி மதுரமான தேநீர், கோப்பிப் பானங்களை நீங்களே வழங்கினுலும் உங்கள் செலவு கை மிஞ்சிப் போகாது.

மில்க்மெயிட் பாவியுங்கள். உலகெங்கும் அது மிக விரும்பப்படும் காரணத்தைக் கண்டறியுங்கள்




விலை ரூ. 11/90-397 கிராம்

மில்க்மெயிட் அற்புதமான இலங்கைத் தேயிலையை மேலும் அதி சுவை பெறச் செய்யும்.

HTL CN 1103

## பிரதமர் மன்னார் வருகிறார்

[மன்னார்]

பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா அடுத்த மாதம் மன்னாருக்கு வருகிறார்.

மன்னாருக்கு விஜயம்செய்யும் பிரதமர் மடுமாதா ஆகஸ்ட் வருடாந்த திருநாள் உற்சவத்திலும் கலந்துகொள்வார்.

கடந்த வருடமும் மடுமாதா ஆகஸ்ட் உற்சவத்தில் பிரதமர் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
ரத்தத்தின் ரத்தமே
[புதிய பிரதி]

2-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீதேவி
குரு (கலர்)

சில தினங்கள் மட்டும்
றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
4-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி, கீதா குமாரசிங்கா, ஜெயபாரதி
மோகனப் புன்னகை
(கலர்)

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
கடைசி இரு தினங்கள் மட்டும்
✶ ரஜனிகாந் ✶ சுஜாதா ✶ விஜயன்
✶ கராத்தே மணி ✶ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

சாந்தி (யாழ் நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
8-வது பரபரப்பூட்டும் வாரம்!
கமல் (இரட்டைவேடம்) சுஜாதா, அம்பிகா,
கடல் மீன்கள்
—கலர்—

ராணி (யாழ் நகர்) 2-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வெற்றி முரசுகொட்டும் 3-வது மாதம்
கார்த்திக்-ராதா-தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
REVENGE OF THE PINK PANTHER

லிடோ (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

Windsor (Jaffna) Last Few Days
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புரூஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

ஸ்ரீதர் (யாழ்.நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார் — லக்ஷ்மி
அவன் அவள் அது

உலகக்கிண்ணம்:

## சிறந்த வீரரான 'ரூேஸிக்கு' இரு பெரும் விருதுகள்

மட்றிட், ஜூலை 13

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 12வது உலக உதைபந்தாட்ட சாம்பியன் போட்டியின் சிறந்த வீரராக இத்தாலிய வீரர் போலோ ரூேஸி தெரிவுசெய்யப்பட்டார்.

உலகத்தின் கவனத்தைப் பெற்ற ரூேஸி, சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டதையடுத்து இரு பெரும் விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டன; உலக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் அதிக கோல்களைப் போட்டவர், சுற்றுப்போட்டிகளில் திறமையாக ஆடியவர் என்ற இரு காரணங்களுக்குமாகவே அவருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

போலோ ரூேஸியை, பத்திரிகையாளர்களே சிறந்த வீரராகத் தெரிவுசெய்தனர். இத்தெரிவையடுத்து சிறந்த வீரருக்கான 4000 டாலர்கள் பெறுமதியான விருதும், அதிக கோல்களைப் போட்டவர் என்பதற்காக 3,700 டாலர்கள் பெறுமதியான விருதும் ரூேஸிக்கு வழங்கப்பட்டன.

உலகக் கிண்ணப் பந்தயங்களில் ஒவ்வொரு விருதுகளையும் ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த மரியோ கெம்ப்ஸ் என்ற வீரர்மட்டுமே பெற்றிருந்தார். கடைசியாக நடைபெற்ற 1978ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளிலேயே அவர் இதனைப்பெற்றிருந்தார்.

இத்தாலிய வீரர் போலோ ரூேஸி கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்தே தமது நாட்டிற்காக விளையாட முன்வந்திருந்தார். அதற்கு முன்னர் குற்றச் செயல் ஒன்று சம்பந்தமாக இவர்மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நான்கு வருடங்களுக்கொரு தடவையே உலக பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நடைபெறுகின்றது. இம்முறை நடைபெற்ற போட்டிகளில் அதிகோல்களைப் போட்ட போலோரூேஸியின் கோல்களின் எண்ணிக்கை ஆறாகும். (கி)

## இன்றைய பலன்

ஆனி மாதம் 30-ம் திகதி
புதன்கிழமை
(14—7—82)

மேடம்: அதிக ஆசையினால் அவஸ்தைப்படுவீர்கள். சிலர் வழக்குவிவகாரங்களினால்மாட்டிக் கொள்ளலாம். சிலரின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தை கிளறிவிடும்.

இடபம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்த தினம். தெய்வத்தின் அருளும் தாராளமாய்க் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உற்சாகமான தினம்.

மிதுனம்: எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும். அவசர முடிவு ஆபத்தில் சிக்கவைக்கலாம். குடும்பத்தில் பதட்டநிலை தென்படும். மனத்திடம் வேண்டும்.

கடகம்: வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி காணும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவும் கிடைக்கும். ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விடயம்கிடைக்கும்.

சிங்கம்: கனிவான சம்பவங்கள் இடம்பெறும். அபிப்பிராய பேதங்கள் மறைந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர். குழந்தையொன்றின்முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும்.

கன்னி: ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள், பூமிப் பிணக்குகளால் கவலை தோன்றக்கூடும். தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும், பொறுமைநன்று.

துலாம்: குடும்ப நலனில அதிக ஆர்வம் பிறக்கும். பந்துக்களின் ஆதரவு பெருகும். நிதானமான பேச்சு மற்றவர்களின் ஒத்துழைப்பைத் தேடித் தரும். நல்ல நாள்.

விருச்சிகம்: பயன்தரும் திட்டங்களில் கவனம் செலுத்தப்படும். நீண்டநாள் மூடுமந்திரமாக இருந்த ஒருஉண்மை இன்று அம்பலத்துக்குவரலாம்

தனு: விளையாட்டுப் பிள்ளையாக இருக்க விரும்புவீர்கள். உமது விசித்திரப்போக்கு மற்றவர்களுக்கு வேடிக்கையைத் தரலாம். சமயோசித புத்தி நன்மையைத்தரும்.

மகரம்: வித்தையில் வெற்றி காணும். வேண்டியது கிடைக்கும். பொது மக்கள் தொடர்புடன் புகழ்வந்துசேரும். நலன் தரும் சம்பவங்கள் நடக்கும்.

கும்பம்: செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும் செய்தொழிலிலும் விருத்தியுண்டு. உடன் பிறந்த ஒருவருக்கு மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும்.

மீனம்: குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்ள நேரிடும். திரை மறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
சு. வேலுப்பிள்ளை

## 'பிள்ளைகளின் உடற்பயிற்சியில் பெற்றோர் அக்கறை வேண்டும்''

-- யாழ். அரசஅதிபர்

[அரியாலை]

மாணவர்களின் உடல் வளர்ச்சிக்கு உடற்பயிற்சிகள் மிக வசியமாகும். இப்படியான உடற்பயிற்சிப் போட்டிகளை பரியோவான் கல்லூரி வருடாவருடம் நடாத்திமாணவர்களை ஊக்குவித்துவருவது பாராட்டுதற்குரியதாகும். பெற்றோரும் இவ்விஷயத்தில் பிள்ளைகளுக்குச் கூடிய உற்சாகம் ஊட்டவேண்டும்.''

இவ்வாறு யாழ். பரியோவான் கல்லூரி வருடாந்த மெய்வல்லுநர் போட்டிக்குப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். மாவட்டஅபிவிருத்திச்சபை செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா பேசுகையில் குப்பிட்டார்.

உப அதிபர் திரு. எஸ். பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற இல்லங்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் திரு தேவநேசன் நேசையா தொடர்ந்துபேசுகையில்,

''யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையே பரந்த அளவில் மெய்வல்லுநர் போட்டி ஒன்று நடத்தப்படுமாயின் இளஞ் சந்ததியினருக்கு மிக நன்மைபயக்கும். இவ்வகையான போட்டியொன்றை நடாத்த பரியோவான் கல்லூரி முயற்சி செய்யுமென்று நம்புகிறேன்'' என்றார்.

போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான விருதுகளையும், கிண்ணங்களையும் திருமதி அனி நேசையா வழங்கினார்.

''பாலஸ்தீன மக்கள்

## இறுதி மூச்சுவரை போராடுவார்கள்''

### பிரெஞ்சு மதகுரு கருத்து

பாரீஸ், ஜூலை 13

லெபனான் மீது இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குப் பிரெஞ்சு மக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

யேவஸ் பொய்ஸிரு எனும் கத்தோலிக்க மடப் பிரமுகர் பிரான்சின் தூதுக்குழு ஒன்றுடன் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன அரபு பிரதேசங்களுக்கு இருதடவை சென்று வந்துள்ளார். மூன்று வழக்கறிஞர்களுடன் அங்குள்ள அரசியல் கைதிகளின் நிலையை அறிந்தும் திரும்பியுள்ளார்.

முன்னாள் கைதிகளையும், கைதுசெய்யப்பட்டவர்களது உறவினர்களையும் இந்த பிரெஞ்சுக்குழு சந்தித்தது. கைதிகளுக்கு வசதியற்ற இடம், மோசமான உணவு, சித்திரவதை, கொலை, சந்தேக நபர்களது உறவினர்களுக்குப் பயமுறுத்தல், கைதுசெய்யப்பட்டவர்களது வீடுகளை தரைமட்டமாக்கல் போன்றவற்றை இஸ்ரேல் கடைப்பிடிப்பதாக இவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் யேவஸ் பொய்ஸிரு மீண்டும் இஸ்ரேலுக்குச் சென்று காஸா பகுதிக்கும், கோலான் மேட்டுப் பகுதிக்கும், ஜோர்தான் நதியின் மேற்குக் கரைக்கும் விஜயம்செய்தார்.

'கொடுமைக்குள்ளானவர்களது நிலை, அடக்குமுறையின் அளவும் தரமும் என்னைக் கிலிகொள்ளவைத்துவிட்டன' என்று கூறுகிறார் இக்கத்தோலிக்க மதகுரு.

இஸ்ரேலிய வீரர்கள் தினமும் பாலஸ்தீனச் சிறுவர்களைக்கொல்கிறார்கள் என்றார். காஸாவில் படுகொலைசெய்யப்பட்ட ஏழு வயதுச் சிறுவனின் தாயாருடன் இந்த மதகுரு சம்பாஷித்தார்.

'இந்த மரணம் தற்செயலாக ஏற்பட்டதல்ல. இஸ்ரேலிய பொலிசார் ஒருவர் வேண்டுமென்றே குறிவைத்துப் பையனைச் சுட்டு வீழ்த்தியுள்ளார். பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களைத் தவிர்ப்பதற்காக இச்சிறுவனின் உடல் பெற்றோரிடம் திருப்பிக்கொடாது ரகசியமாகத் தகனஞ்செய்யப்பட்டது' என்று தெரிவித்தார்.

'பாலஸ்தீன மக்கள் வாழும் பகுதியொன்றின் மேயரையும் இப்பிரெஞ்சுக் குழுவினர் சந்தித்தனர். தாக்குதல்களினால் இரு கால்களை இழந்தபோதும் இந்த மேயரது திடசங்கற்பம் சிதறிவிடவில்லை. 'ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் வாழும் பாலஸ்தீனிய மக்களது நிலை மிகக் கஷ்டமாக உள்ளது' என்று இந்த மதகுரு கூறுகிறார்.

பாலஸ்தீன மக்கள், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தோடு சேர்ந்து நின்று தமது இறுதிவெற்றி வரை போராட சங்கற்பம் கொண்டுள்ளதை என்னால் காணமுடிந்தது' என்றும்அவர் கூறினார்.

லெபனானிலிருந்து இஸ்ரேலியத் துருப்புக்கள் வெளியேற வேண்டுமென்று பாதுகாப்புச் சபையில் கொண்டுவந்த தீர்மானமும் அமெரிக்காவில் 'வீட்டோ' செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பரிசளிப்பு விழா

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வருடாந்த பெற்றோர் தினவிழாவும், பரிசளிப்பு விழாவும் இம் மாதம் 30ம் திகதி வெள்ளிக்கிழமையன்று நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் திரு வி. நாகராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ் கல்வித்திணைக்களக பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். எம் மன்சூர் கலந்து கொள்வார். (இ)

திருக்குடும்ப கன்னியர்மட

## கனிஷ்ட பிரிவு இல்லப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் திருக்குடும்ப ஆங்கில கன்னியர்மட கனிஷ்ட பிரிவு வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிவரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறும்.

## நெல்லியடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

4 உட்காயங்களும் இருந்தன துவக்குச்சூட்டினல் ஏற்பட்ட அதிர்ச்சியினலும் மூளை சிதறியமையினலும் மரணம் சம்பவித்துள்ளது.

''மல்லவராச்சியின் உடலில் 8 வெளிக்காயங்களும் 5 உட்காயங்களும் இருந்தன. துவக்குச்சூட்டுக்காயத்தினல் ஏற்பட்ட இரத்தப்பெருக்கினலும் மூச்சுத்திணறலாலும் அதிர்ச்சியினலும் மரணம் சம்பவித்தது. குணபாலவின் சடலத்தில் 15 வெளிக்காயங்களும் 3 உட்காயங்களும் இருந்தன துவக்குச்சூட்டு காயங்களினல் ஏற்பட்ட அதிர்ச்சியினலும் இரத்தப்பெருக்கினலும் மரணம் சம்பவித்தது. அருந்தவராசாவின் உடலில் 27 வெளிக்காயங்களும் 6 உட்காயங்களும் இருந்தன துவக்குச்சூட்டுக்காயங்களினல் ஏற்பட்ட அதிர்ச்சியினலும் இரத்தப்பெருக்கினலும் மூளை சிதறியமையினலும் மரணம் சம்பவித்தது.

''சட்டவைத்திய அதிகாரி பிரேதத்தில் துவக்குச்சூட்டுக்காயங்களுடன் 3 கத்திக்குத்துக்காயங்களும் 4 உரசல் காயங்களும் காணப்பட்டன''

பிரேதபரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பித்து சாட்சியமளித்தபின் சம்பவதினம் பருத்தித்துறை நீதவானுடன் ஸ்தலத்தைப் பார்வையிடச் சென்ற பருத்தித்துறை நீதிமன்றப் பதிவாளரும் இவ்விசாரணையின் போது சாட்சியமளிக்க அழைக்கப்பட வேண்டும் என்று யாழ் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ். எஸ். நவரத்தினராஜா விடுத்த கோரிக்கையை நீதவான் ஏற்றுக்கொண்டதை அடுத்து பதிவாளர் திரு. றிச்சர்ட் ஜெயராசசிங்கம் சாட்சியமளித்தார். அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது;-

### பதிவாளர் சாட்சியம்

''2-7-82 இரவு 9-45 மணியளவில் நானும் நீதவான் திரு. மகேசனும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றோம். அங்கு பொலிஸ் அதிபர் திரு. நவரத்தினராஜாவும் நின்றார்.

''சம்பவம் நடைபெற்ற இடத்தையும் சடலங்களையும் ஜீப்பையும் பார்வையிட்ட நீதவான் தமது அவதானங்களைக் குறிப்பெடுக்குமாறு உத்தரவிட்டார். அவர் கூறியபடி அவரது அவதானங்களைக்குறிப்பெடுத்தேன். அக்குறிப்புக்களை இங்குசமர்ப்பிக்கிறேன்.''

நல்லூர்த் தொகுதியில் உள்ள சீமெந்து தேவையானோர் இன்றும், நாளையும் தொடர்பு கொள்ளவும்

**ராஜ் சன்ஸ் ட்ரேடிங் கம்பனி**

50, வைமன் வீதி, யாழ்ப்பாணம். (3861)

## யாழ்ப்பாணத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யீட்டை யாழ். மாவட்ட அமைச்சரிடம் கையளித்து விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார். யாழ். மேலதிக அரசாங்க அதிபர்களான திருவாளர்கள் எஸ்.எஸ் தர்மபாலன், எம். பஞ்சலிங்கம், யாழ்.மாவட்ட அமைச்சரின் இணைப்பு அதிகாரியும் உதவி அதிபருமான திரு. எஸ். ரி. பாலசிங்கம், செயலக உயர் அதிகாரிகள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். [வெ]

## இன்று . .

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி பேய்ச்சி அம்பாள் ஆலய மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்தாம் நாள் 23-ம் திகதி தேர் உற்சவமும், அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டுப் பேரறிஞர் பாவலர் பால்வண்ணனர் ''பெரியபுராணம்'' என்னும் பொருள்பற்றி இன்றுமாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் விரிவுரை வழங்குகிறார்.

## யோகேஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து வழக்காளிகளின் சட்டத்தரணி திரு. இ. பாலசுப்பிரமணியம் மாவட்ட நீதிபதி எம். டி. ஜேசுரத்தினம் முன்னிலையில் வழக்கை வாபஸ் பெறுவதாக நேற்று மனுத் தாக்கல் செய்திருந்ததைத் தொடர்ந்து நீதிபதி வழக்கை தள்ளுபடி செய்தார்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சினித்தம்பி

கரம்பொன் மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சினித்தம்பி அவர்கள் காலமானர். அன்னர் திருமதி நாகம்மா, கனகசபை, நவரெத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும், கொழும்பு பிரபல வர்த்தகர் நா. வே. கனகசபை, காலஞ்சென்ற நாகம்மா ஆகியோரின் அன்பு மாமனரும், கிளிநொச்சி பெரும்பாக உத்தியோகத்தர் க. சுந்தரேசன், க. மகேந்திரன், க. விஜயநாதன், க. கிருபாநாதன் (மேற்கு ஜேர்மனி), க. கலாமோகன், ந. தெய்வேந்திரன் (மேற்கு ஜேர்மனி), ந. தனேந்திரன், ந. தனேஸ்வரி, ந. கேதீஸ்வரி, ந. ரஜனி ஆகியோரின் பேரனுமாவார். அன்னரது ஈமக்கிரியைகள் கரம்பன் மேற்கு சேமக்காலையில் இன்று (14-7-82) புதன்கிழமை பகல் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். 3864

## மரண அறிவித்தல்

### நாகமுத்து தெய்வேந்திரம்

யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா புத்தகசாலையின் பங்காளர் நாகமுத்து தெய்வேந்திரம் 13-7-82ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற உத்தமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், ஸ்ரீலங்கா புத்தகசாலை பங்காளர் கந்தசாமி, மாணிக்கம், காலஞ்சென்ற பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஈஸ்வரியின் மைத்துனரும், இராசேந்திரன், யோகேந்திரன், சிவனேந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் பெரியதகப்பனும், பாரின், செல்வவதி, ஞானேந்திரன் ஆகியோரின் பெத்தப்பாவுமாவார். அன்னரது பூதவுடல் 14-7-82 (இன்று) புதன்கிழமை மாலை 4 மணிபளவில் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

14, அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

3862

**TRUST TRAVEL SERVICE**

HIRDRAMANI ARACADE
65, CHATHAM STREET
COLOMBO 1
TELEPHONE: 548409 OR 548811

✯ குறைந்த கட்டணத்தில் ✯
உங்கள் டிக்கெட்டுகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்

கொழும்பு/செக்கோசுலேவியா OR சோபியா
**Colombo/Prague or Sofia**
**Visa உடன் Rs 7700/-**

கொழும்பு/ரோம்
**Colombo/Rome Rs 7600-/**

கொழும்பு/லண்டன்
**Colombo/London Rs 7600/-**

கொழும்பு/சிங்கப்பூர் (இருவழி றிக்கற்)
**Colombo/Singapore (Return) Rs 6450/-**

கொழும்பு/கராச்சி
**Colombo/Karachi Rs 2650-/**

யாழ்ப்பாணத்தில்
ரஸ்ற் ரவல் சேவிஸ்
11/A மொம்சாக்கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8111 3841

## யாழ். பொதுநூலக நிதிக்காக

மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன்
அவர்களின் தலைமையில்
தமிழ்நாடு ஆஸ்தான நர்த்தகி

# குமாரி சுவர்ணமுகியின்

## நடன நிகழ்ச்சி



பிரதம விருந்தினர்: எதிர்க்கட்சி முதல்வர்
மாண்புமிகு அ. அமிர்தலிங்கம் பா. உ.

காலம்: 19-07-82 பி. ப. 6.00 மணி

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்

பிரவேசச்சீட்டு: ரூபா 250/-, ரூபா 100/-, ரூபா 50/-, ரூபா 25/-
(இருவர் மட்டும்)

★ யாழ். நகரில் பிரவேசச்சீட்டுப்பெறும் இடங்கள்:

1. றோயல் டிஸ்பென்சறி
2. றிக்கோ
3. மணியம்ஸ்
4. பொண்ட் இன்ஸ்ரிரியூட்
5. விக்ரர் அன் சன்ஸ்
6. யாழ். நகரமண்டபம்
7. றிச் கோப்பி பார்
8. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்

3863

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூலை மீ 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.P. 100236/81
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.